1970 மார்ச் 11]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குற்றம் எத்தகையது என்பதைத்தான் கேட்டிருக்கிறார்கள். அது பத்திரிகையில் வந்திருக்கிறது. மேற்கொண்டு இந்த நேரத்தில், வழக்கு விசாரணையில் இருக்கின்ற நேரத்தில் எந்த விவரத்தையும் அரசாங்கத் தரப்பில் வெளியிடுவது சரியல்ல என்ற காரணத்தால் பதில் சொல்ல மறுக்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : வழக்கு மன்றத்தில் இருப்பதால் அதனுடைய உள் விஷயத்தைக் கேட்க வரவில்லை. மோசடி எந்த அளவுக்கு, எவ்வளவு மோசடி ஏற்பட்டது என்பதைத் கூறினால் அது வழக்கைப் பாதிக்காது. எவ்வளவு தொகை மோசடி செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைக் கூடச் சொல்லுவதற்கு அவசியம் இல்லையென்று கருதுகிறேன்.

மதுராந்தகம் வட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு மாவு ஆலை

* 319 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு (குச்சி கிழங்கு) மாவு தயாரிக்கக் கூட்டுறவு ஆலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : மதுராந்தகம் பகுதியில் குச்சி கிழங்கு அதிகமாகப் பயிராவதாலும், அதை விற்க மார்க்கட் இல்லாததாலும் இப்பேர்ப்பட்ட ஆலையைக் கூட்டுறவுத் துறையிலோ அல்லது தனியாருக்குச் சலுகை கொடுத்தோ அரசு ஏற்படுத்துவதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபோன்ற கூட்டுறவு ஆலையை அமைக்க சேலத்தில் ஐயாயிரம் ரூபாய் முதலும், 76,200 ரூபாய் கடனும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சேலம் மாவட்டத்தில் குச்சிக் கிழங்கு உற்பத்திக்காகவும் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்திலும் இது போன்ற ஆலையை அமைக்க தனியார் முன்வந்தால் இதுபோன்ற உதவிகள் செய்யப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : மரவள்ளிக் கிழங்குத் தொழிற்சாலைகள் சேலம் மாவட்டத்தில் அதிகமாக இருக்கின்றன. ரொட்டி செய்யும்போது இந்த மாவைக் கலப்படம் செய்து உபயோகித்துவிடுகிறார்கள். இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலைத் தொடங்குவதைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். கலப்படத்தைத் தடை செய்வதைப் பற்றிச் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கேட்கலாம்.

Deposits of iron ore.

* 320 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether any agency of the U.N. is (i) mapping and (ii) surveying the iron ore deposits in this State ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) பேரவையின் முன் விவர அறிக்கை , ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : இந்த இரும்புக் கனி வள ஆராய்ச்சி ஸ்தாபனத்திற்கு மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசின் மூலமாகத்தான் இந்த யு.என்.டி. ப்ராஜக்ட் என்ற திட்டத்தில் யு.என்.டி. அலுவலர்கள் இங்கு பணியாற்றி வருகிறார்கள்.

மைகா படிவங்கள்

■321 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள நற்சாந்துப்பட்டியை அடுத்திருக்கும் இடுக்குமலைப் பகுதியில் மைகா படிவங்கள் தென்படுவது குறித்து அரசு ஆய்வு நடத்தியுள்ளதா ?

(இ) ஆமெனில் அதன் விளைவு என்ன ?

THE HON. THIRU S. MADHAVAN : (a) & (b) The Geological Survey of India has carried out systematic Geological mapping in the hills near Narchanthupatti, Tirumayam taluk of Tiruchirappalli District during the years 1960-61 and 1961-62. Biotite (a black variety of mica) has been noticed to occur in Charnockite (granites) in a quarry near Narchanthupatti and the occurrence is reported to be of no economic importance.

■322 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகருக்கு அருகே எரிச்ச நத்தம் கிராமத்தில் " மைக்கா " இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

---

a 211–212-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.